# செயலாற்றுகை அறிக்கை

# 2013

## கல்வி வெளியிட்டுத் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. அறிமுகமும் பின்னணி விபரங்களும் | 1 |
| 2. தூர நோக்கும் - பணிக்கூற்றும் | 2 |
| 3. ஒழுங்கு முறையும் - நிருவாகமும் | 3 4 |
| 4. தாபனப் பிரிவு | 5 7 |
| 5. அபிவிருத்தி பிரிவு | 8 10 |
| 6. தகவல் தொழிநுட்ப பிரிவு | 11 |
| 7. உற்பத்தி பிரிவு | 12 14 |
| 8. வெளியீட்டுப் பிரிவு | 15 |
| 9. விநியோகப் பிரிவு | 16 19 |
| 10. நிதிப் பிரிவு | 20 26 |
| 11. உள்ளகக்கணக்காய்வுப் பிரிவு | 27 28 |

# 1. கல்வி வெளியீட்டுத் திணைக்கள செயலாற்றுகை அறிக்கை - 2013

## அறிமுகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் உயர் தரத்திலானதொரு திணைக்களமாகும். அரசினால் பாடசாலைப் பாடநூல்களை இலவசமாக விநியோகிக்கும் தேசிய கொள்கையை அமுல் நடத்துவதே இத்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும்

இதற்கு மேலதிகமாக க.பொ.த. உயர் தர மற்றும் மேல்மட்டப் பரீட்சைகளுக்கான தரமான வாசிப்பு நூல்களை வெளியிடல், ஏனைய கற்றல் சாதனங்களை உற்பத்தி செய்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்குப் பங்களிப்புச் செய்தல் என்பன இத்திணைக்களத்தின் செயற்பாட்டுக்குட்பட்டவையாகும்.

## பின்னணி

1965 மார்ச் 27 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது நிதி அமைச்சின் கீழ் தனியான செலவுப் பிரிவொன்றாகத் தாபிக்கப்பட்டது. மேலும் 1966 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியிட்டுத் திணைக்களமானது அதற்குரித்தான கல்வி மற்றும் கலாச்சார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

1966 ஆம் ஆண்டு மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்குக் கீழ் வரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ❖ ஆரம்ப, இரண்டாந்தர, உயர் கல்விகளின் பயன்பாட்டுக்காக அனுமதிக்கப்பட்ட பாடநூல்களை மொழி பெயர்த்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் வெளியீட்டு உரிமையை (கொள்வனவு செய்தல்) பணங் கொடுத்து வாங்குதல்.

- ❖ கல்வி நடவடிக்கைக்கு தேவையான பாடநூல்கள், அகராதிகள், கலைச்சொற்றொகுதிகள் வேறு நூல்களை உற்பத்தி செய்தல், பகிரங்கப் படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

- ❖ மாணவர் துணைச்சாதணங்கள் கற்புல, செவிப்புல மற்றும் சாதனங்களை உற்பத்தி செய்தல் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

- ❖ வாசித்தல் சாதனங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

B தரத்திலான ஒரு திணைக்களமாக உருவாக்கப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது 2004.07.14 திகதியன்று உயர்தரமாக்கப்பட்டதுடன் கல்வி வெளியீட்டு ஆணையாளர் எனும் பதவி கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் என உயர்த்தப்பட்டது. இம் முக்கிய வேறுபாடு காரணமாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் நிலையானது கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் நிலைக்கு உயர்வடைந்தது.

# தொலை நோக்கும் பணிக்கூற்றும்

## தொலை நோக்கு

சர்வதேச கல்வி அபிவிருத்தியுடன் இணைந்ததாக உயர்தரத்திலான கல்வித் துணைச் சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதன் மூலம் அனைவருக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்தல்.

## பணிக் கூற்று

இலவச பாடநூல் விநியோகம் எனும் அரசின் தேசிய கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதுடன் கல்விச் செயற்பாட்டிற்குத் தேவைப்படும் ஏனைய பாடநூல்கள் செயல்நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்கள், கலைச் சொல் அகராதிகள், மேலதிக வாசிப்பு நூல்கள், சொற்களஞ்சியங்கள் வேறு கட்புல – செவிப்புல துணைச்சாதனங்கள் உட்பட ஏனைய துணைச்சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதனால் கல்வித் தரத்தை விருத்தி செய்வதன் மூலம் நாட்டுக்கு செயற்திறன் மிக்கதும், பண்பும் அறிவும் மிக்கதுமான பிரஜைகள் குழு ஒன்றை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தல்.


## கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் - நிருவாக ஒழுங்கும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்படும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்திற்கு அவரின் நிருவாக செயற்பாடுகளில் இலங்கை கல்வி நிருவாக சேவை 1 ஆம் வகுப்பு அதிகாரிகளான ஆணையாளர் (உற்பத்தி மற்றும் விநியோகம்), ஆணையாளர் (அபிவிருத்தி) ஆகிய அதிகாரிகள் இருவரதும் பிரதி, உதவி ஆணையாளர்கள் 28 பேரினதும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. நிதிப்பிரிவுக்குப் பொறுப்பாக பிரதான கணக்காளராக இலங்கை கணக்காளர் சேவை 1ஐச் சேர்ந்த ஓர் அதிகாரி கடமையாற்றுகின்றார். கணக்காளர் சேவை 2 ஐச் சேர்ந்த ஓர் அதிகாரி அடுத்த கணக்காளராக செயற்படுகிறார். உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்குப் பொறுப்பாக கணக்காளர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த ஒரு அதிகாரியும் சேவையாற்றுகின்றார்.

நிருவாக இலகுபடுத்தலை நோக்காகக் கொண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது தாபனப்பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, விநியோகப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் நிதிப்பிரிவு என பிரதான ஆறு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பானது மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

# கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## 4. தாபனப் பிரிவு

தாபனப் பிரிவின் பிரதான கடமையாவது திணைக்களத்தின் சாதாரண நிருவாகமும் மற்றும் அனைத்து ஊழியர்களதும் நிறுவன நடவடிக்கை தொடர்பான கருமங்களை நிறைவு செய்தலுமாகும்.

**2013.12.31 திகதியன்று திணைக்கள உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பு கீழ்வருமாறு.**

| பதவி | உரிய சேவை | வகுப்பு / தரம் | அனுமதிக்கப் பட்ட உத்தியோகத் தர் தொகை | தற்போதுள்ள தொகை | பதவி வெற்றிட தொகை |
|---|---|---|---|---|---|
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் | இ.க.நி.சே | I | 01 | 01 | |
| ஆணையாளர் | இ.க.நி.சே | I | 02 | 02 | |
| பிரதம கணக்காளர்<br>பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள்<br>கணக்காளர் | இ.க..சே<br>இ.க.சே<br>இ.க..சே | I<br>I<br>II/II | 01<br>01<br>01 | 01<br>01 | 01 |
| பிரதி ஆணையாளர்<br>உதவி ஆணையாளர் | இ.க.நி.சே | I/II<br>III | 38 | 28 | 10 |
| உதவி ஆணையாளர் (தகவல் தொழிநுட்பம் முறைமை பகுப்பாய்வாளர்) | இ.த.அ.தொ.நு.சே | III | 01 | 01 | |
| நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ..சே | உயர் தரம் | 01 | | 01 |
| விற்பனை முகாமையாளர் | திணைக்களத்தினால் | | 01 | 01 | |
| மொழி பெயர்பாளர் | திணைக்களத்தினால் | சிங்களம்/தமிழ்<br>சிங்களம்/ஆங்கிலம் | 01<br>01 | | 02 |
| கணினி பக்க அமைப்பாளர் | திணைக்களத்தினால் | | 06 | | 06 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | அ.மு.உ..சே<br>அ.மு.உ..சே<br>அ.மு.உ..சே | I<br>II<br>III | 55 | 11<br>18<br>07 | 19 |
| நூலகர் | நூலகர் சேவை | III | 01 | | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | கிட்டிய சேவை | | 20 | 13 | 07 |
| நிதி உதவியாளர்<br>வரவு செலவுஉதவியாளர் | கிட்டிய சேவை<br>கிட்டிய சேவை | | 01<br>01 | 01<br>01 | |
| சரவை நோக்குனர் | திணைக்களத்தினால் | சிங்கள மொ.மு<br>ஆங்கில மொ.மு<br>தமிழ் மொ.மு | 02<br>01<br>01 | | 02<br>01<br>01 |
| சிற்பக்கலைஞர் | திணைக்களத்தினால் | - | 01 | | 01 |
| சாரதி | சாரதிமார் சேவை | I<br>II ‘அ’<br>II ‘ஆ’ | 12 | 02<br>04<br>05 | 01 |
| காரியாலய ஊழியர் சேவை | கா.ஊ.சே | I<br>II<br>III | 15 | 01<br>02<br>02 | 10 |
| விற்பனை உதவியாளர் | | | 15 | 15 | |
| களஞ்சியசாலைக் காவலாளர் | முதனிலை சேவை | | 07 | 07 | |
| களஞ்சியசாலை ஊழியர் | முதனிலை சேவை | | 35 | 35 | |
| ஆய்வு கூட ஊழியர் | முதனிலை சேவை | | 01 | 01 | |
| நூலக ஊழியர் | முதனிலை சேவை | | 01 | 01 | |
| **மொத்தம்** | | | **224** | **161** | **63** |

**2013 ஆம் ஆண்டிற்குள் மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்**

| பதவி | தரம் | மாற்றம் பெற்று வந்தோர் தொகை |
|---|---|---|
| 1. இல.க.நி.சே | I ஆம் வகுப்பு | 01 |
| 2. இல.க.நி.சே | III ஆம் வகுப்பு | 01 |
| 3. அரச முகாமைத்துவ | II ஆம் வகுப்பு | 05 |
| உதவியாளர் சேவை | I ஆம் வகுப்பு | 02 |
| 4. சாரதி | I ஆம் வகுப்பு | 01 |
| | II ஆம் வகுப்பு | 01 |
| 7. கா.ஊ.சே | II ஆம் வகுப்பு | 01 |

**2013 ஆம் ஆண்டிற்குள் மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்**

| பதவி | வகுப்பு | உத்தியோகத்தர் தொகை |
|---|---|---|
| 1. இல.க.நி.சே | II ஆம் வகுப்பு | 01 |
| 2. இலங்கை கணக்காளர் சேவை | I ஆம் வகுப்பு | 01 |
| 3. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | II ஆம் வகுப்பு | 04 |
| | III ஆம் வகுப்பு | 01 |
| 4. சாரதி | I ஆம் வகுப்பு | 01 |
| | II ஆம் வகுப்பு | 01 |
| 5. கா.ஊ.சே | II ஆம்வகுப்பு | 01 |

**2013 ஆம் வருடத்துள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை I | 02 |

**2013 ஆம் வருடம் புதிதாக பதவியேற்றோர்**

| பதவி | வகுப்பு | உத்தியோகத்தர் தொகை |
|---|---|---|
| 1. கா.ஊ.சே | III ஆம் வகுப்பு | 02 |
| 2. இ.க.நி.சே | III ஆம் வகுப்பு | 06 |
| 3. விற்பனை உதவியாளர் | III ஆம் வகுப்பு | 06 |
| 4. களஞ்சிய சிற்றூழியர் | III ஆம் வகுப்பு | 09 |
| 5. களஞ்சியக் காவலாளர் | I ஆம் வகுப்பு | 01 |

**2013 ஆம் வருடத்துள் வெளிநாட்டுப் பயிற்சி**

இந்திய அரச அனுசரனையில் 2013.08.01 முதல் 2013.08.10 வரை இந்தியாவில் இடம்பெற்ற விஷேட பயிற்சிநெறியில் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் உட்பட உதவி ஆணையாளர் ஒருவர் பங்குபற்றியுள்ளார்.

**திணைக்கள நிதி ஒதுக்கு மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட தேசிய மட்டத்திலான பயிற்சிகள்**

1. மிலோதா நிறுவனம் மூலம் நடத்தப்பட்ட CIGAS பயிற்சி நெறியில் நான்கு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
2. SEFL நிறுவனம் மூலம் நடாத்தப்பட்ட கணினிப் பயிற்சி நெறியில் ஆறு உத்தியோகத்தர் கலந்து கொண்டார்.
3. அரச மொழிகள் திணைக்களம் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறியில் 25 பேர் கலந்து கொண்டனர்.

# அபிவிருத்திப் பிரிவு

## அறிமுகம்

கற்றல் சாதனங்களை உற்பத்திசெய்து விநியோகிப்பதனால் கல்வியின் தரத்தை விருத்திசெய்வதன் மூலம் நாட்டுக்குப் பயன்மிக்க, தரமான, புத்திகூர்மைமிக்க மக்கள் குழுவொன்றை உருவாக்கும் நோக்கத்துக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கல்வித்துறைப் பிரிவாக அபிவிருத்திப் பிரிவு காணப்படுவதுடன் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களிலான மூன்று பிரிவுகளாக செயற்படுகின்றது. அதற்கு வழிங்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்புக்களாவன.

- தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்படும் பாடத்திட்டத்தை மையமாகக் கொண்டு பாடநூல்களை ஆக்குதல் மற்றும்
- கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் ஆக்கப்பட்டு மீள்பதிப்பு செய்யப்படும் பாடநூல்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு வழிமுறைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

இதற்கு மேலதிகமாக

- கா.பொ.த. உ/த மற்றும் வேறு உயர்தரப் பரீட்சைகளுக்கான மேலதிக வாசிப்பு நூல்களை உருவாக்குவதும் அபிவிருத்திப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு பொறுப்பாகும்.

## அபிவிருத்திப் பிரிவின் செயற்குழு

ஆணையாளர் (அபிவிருத்தி)

↓

பிரதி / உதவி ஆணையாளர்கள் (28)

↓

முகாமைத்துவ உதவியாளர்கள் (02)

அபிவிருத்தி உத்தியோகத்தர் (07)

**2014 ஆம் ஆண்டுக்காக மீள் பதிப்பு செய்யப்பட்ட நூல்களின்**

- உள்ளடக்கத்தின் தரத்தை அதிகரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டிலும் கூட பல்வேறு வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தல்.
- பிரதான பாடங்களுக்காக அதாவது கணிதம், விஞ்ஞானம், சமயம் மற்றும் வரலாறு போன்ற பாடங்களுக்கான விடயதானங்களை இற்றைப்படுத்தல்.

மீள்பதிப்பிற்காக வடிவமைக்கப்பட்ட பாடநூல்களில் உரிய திருத்தங்களை உள்வாங்கி கணினி மயப்படுத்தி மென்பிரதியை அமைத்தல். இது 2013 மே மாதமாகும் போதே முடித்து உற்பத்திப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஆரம்பமான செயற்திட்டத்திற்கிணங்க 2013 ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 1 – 5 தரத்துக்கான பிரிவெனாப் பாட நூல்கள்

| **தரம்** | **விடயம்** |
|---|---|
| தரம் - 1 | திரிபீடக தர்மம் |
| தரம் - 2 | திரிபீடக தர்மம் |
| தரம் - 3 | பிரிவெனா சிங்களம், பிரிவெனா சமஸ்கிருதம் |
| தரம் - 4 | பிரிவெனா சிங்களம், பிரிவெனா சமஸ்கிருதம் |

புதிய பாடதிட்டத்திற்கிணங்க பாடநூல்களை ஆக்கும் போது அபிவிருத்திப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

01. புதிய பாடதிட்டத்துக்கிணங்க பாடநூல்கள் புதிதாக எழுதப்பட வேண்டுமா அன்றி ஆழமானதொரு திருத்தத்திறகிணங்க மீள் பதிப்புக்கு உட்படுத்துவதா என ஆய்ந்தறிவதற்காக விஷேட செயலமர்வொன்று தேசிய கல்வி நிறுவக பாட இணைப்பாளர்கள், பங்கலைக்கழகப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள். கல்வியற்கல்லூரி விரிவுரையாளர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது.

02. தரமான பாடநூலொன்றின் பண்புகள் யாவை – கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்குரிய இலட்சணங்கள் அடையாளங்கள் யாவை என்பதை இனங்கான்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரிகள் நாட்டிலுள்ள இது தொடர்பான நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றுடன் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்வதற்கான கூட்டமொன்று நடத்தப்பட்டது.

03. எழுத்தாளர்கள் / பதிப்பாசிரியர்கள் குழுவுக்கான அறிவுறுத்தல் செயலமர்வுகள் 2013 ஜனவரி 25 ஆம் திகதி ஜனகலா நிலையத்திலும், 2013 ஜனவரி 27 ஆம் திகதி கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்திலும் காலை 8.30 முதல் மாலை 5.00 மணி வரை இடம்பெற்றன.

04. தரம் 6 தரம் 10 களுக்கான 2015 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டம் தேசிய கல்வி நிறுவகத்திடமிருந்து எமக்குப் பெற்றுத் தரப்பட்டது. இதற்கிணங்க எழுத்தாளர் குழு அங்கத்தவர்களில் தேசிய கல்வி நிறுவனத்தில் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளின் ஆக்கத்தில் பங்களிப்பு செய்த ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் இருவர் கட்டாயமாக உள்வாங்கப்பட்டனர். பதிப்பாசிரியர்கள் குழுவில் தேசிய கல்வி நிறுவக பாடப் பணிப்பாளர், பல்கலைக் கழக விரிவுரையாளர் / பேராசிரியர் ஒருவர் / கல்வியியற் கல்லூரி விரிவுரையளரொருவர் கல்வியியலாளர்கள் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தரொருவர் மற்றும் க. வெ. தி பாடத்துக்குப் பொறுப்பான ஆணையாளர் ஆகியோர் உள்ளடக்கப்பட்டனர். இவ்வாறான பதிப்பாசிரியர் குழுவொன்றை நியமிப்பதன் நோக்கம் யாதெனில் உயர்தரத்திலான பாடநூலொன்றை உருவாக்கிக் கொள்வதாகும்.

05. 28 விடயதானங்களுக்கான சிங்களம், தமிழ் - ஆங்கில மொழி மூலங்களிலான பாட நூலாக்கம் 2013 ஆம் ஆண்டு ஆரம்பமானது. எழுத்தாளர்கள் பதிப்பாசிரியர்கள் குழுக்களுக்கான செயலமர்வுகள் நடாத்தப்பட்டு புதிய பாடநூலாக்க வேலைகள் உயர்ந்தமட்டத்தில் மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன உரிய பாடநூல்களின் அனேகமான அத்தியாயங்கள் எழுதப்பட்டு பதிப்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

06. 2013 ஆண்டிலும் பாடநூலாக்கத்துக்காகத் தெரிவுசெய்யப்படும் தாள்களின் தரப் பரீசீலணையும் இடம்பெற்றது. இதற்காக எமது ஆய்வுகூடத்தில் காணப்படுகின்ற இயந்திரங்கள் தொழிநுட்ப சேவைகள் என்பன பெரிதும் உதவியது.

07. ஆக்கத்திறன் மேம்பாட்டு அமைச்சு மூலம் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டு கல்வி வெளியீட்டுத்திணைக்கள நடவடிக்கைகளை மிகவும் ஆக்கத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்தி முன்னேற்ற அறிக்கையை உரிய காலத்துள் முன்வைத்ததன் மூலம் எமது நிறுவனம் பாராட்டுகளைப் பெற்றுக்கொண்டது.

08. இசுருபாய க.வெ.தி. நூல் விற்பனை மேம்பாட்டு நிலையத்தில் விற்பனை செய்யப்படும் நூல்களுக்கு (Bar coad system) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் விற்பனை மேம்பாட்டு நிலையங்களின் நடவடிக்கைகளை மிகக்காரிய சித்தியுடனும், முறையாகவும் மேற்கொள்வதற்கு முடிந்துள்ளது. இதுவும் இவ்வருடத்தில் எமக்கு கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும்.

## தகவல் தொழில்நுட்பப் பிரிவு

திணைக்களத்தின் சகல தரவுகளையும் நடாத்திச் செய்தல், இற்றைப்படுத்தல் தொடர்பான பொறுப்புகளுடன், பாடநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், வேறு நூல்களைக் கணினி மயப்படுத்தல் அவற்றின் மென் பிரதியைப் பெற்று அச்சுக்குப் பொருத்தமான விதத்தில் வடிவமைத்தல் என்பன இப்பிரிவின் பிரதான பொறுப்புகளாகும்.

உதவி ஆணையாளர் (தகவல் தொழிநுட்பம்) / முகாமைப்பகுப்பாய்வாளர்

↓

அபிவிருத்தி உத்தியோகத்தர் (01)

↓

கனிஷ்ட ஊழியர் சேவை (15)

**கீழ்வரும் பணிகள் இப்பிரிவு மூலம் இடம்பெறுகின்றன.**

1. 2014 ஆம் வருடத்துக்கான கோரல் படிவத்தை வடிவமைத்து அச்சுக்காக ஒப்படைத்தல்
2. 2014 ஆம் வருடத்துக்கு அச்சிடுவதற்கு அவசியமான நூல்களின் தொகைபற்றிய விபரங்களை உற்பத்திப் பிரிவிற்கு வழங்குதல்.
3. அபிவிருத்திப் பிரிவில் தயாரிக்கப்பட்ட பாடநூல்களைக் கணினிமயப்படுத்தலும் மென்பிரதியைத் தயாரித்தலும்.
4. களஞ்சியசாலைகளில் பாடநூல் விநியோகம் தொடர்பான விபரங்களைக் கணினிமயப்படுத்துவதற்கு அவசியமான கணினிவடிவமைப்பை உருவமைத்து களஞ்சியங்களின் தரவுகளை நடாத்திச்செல்லல்.
5. விநியோகித்து முடிவடைந்த பாடநூல்களின் தொகையையும் நூல்களின் பெறுமதியையும் நிதிப்பிரிவிற்கு வழங்கல்.
6. திணைக்களத்தின் இணையதளத்தை இற்றைப்படுத்தி நடாத்திச்செல்வதும் இணையதளத்திற்குப் பாடநூல்களை உள்வாங்கலும்.
7. 5 ஆம் தரத்துக்கான வினாவிடை நூலிற்கும் க.பொ.த சா/த மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கடந்தகால வினாப்பத்திர நூல்களினதும் மாதிரிவினாக்கள் மற்றும் விடைகள் அடங்கிய நூல்களின் வெளி அட்டைகளை வடிவமைத்தல்.
8. மேலதிக நூல்களை கணினிமயப்படுத்தல்.
9. கல்வி வெளியீட்டுத்திணைக்களம், கல்வி அமைச்சுகளின் விழாக்களுக்கு அவசியமான அழைப்பிதழ்கள் பதாதைகள், சுவரொட்டிகளை (பனர், போஸ்டர்களை) வடிவமைத்தல்

12. திணைக்களத்தின் அனைத்து கணினிகளையும் பராமரித்தல்.

# உற்பத்திப் பிரிவு


**அறிமுகம்**

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பங்களிப்புடன் பாடசாலை மாணவர்களுக்காக ஆக்கப்படுகின்ற சகல பாடநூல்களையும் அரசாங்க அச்சகம், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், தனியார் அச்சகத்தினர் மூலமாக அச்சடித்தல் கருமங்களை மேற்கொள்வது இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகம் மூலம் வடிவமைக்கப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் மற்றும் பாடத்திட்டங்களை அச்சிடுதலும் இடம் பெறுகின்றது.

இந்த வருடம் தொடக்கம் பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து கணிப்பீட்டு அறிக்கை அச்சிடுதலும் மேற்கொள்ளப்பட்டது.

**உற்பத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள்**




**2013 ஆம் வருடத்துள் இப்பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.**

1“ பாடசாலைப் பாடநூல்களுக்கான ஒப்பந்தங்களை (வுநனெ)ச வழங்குவதற்குமுன் விவரக்குறிப்புகளை அமைப்பதற்கு அவசியமான விபரங்களைத் திரட்டுதல். தகவல் தொழில்நுட்பப் பிரிவு, விநியோகப் பிரிவு மற்றும் களஞ்சியங்களிலிருந்து மொத்த இருப்பைப் பெற்றுக்கொள்ளல்.

2. மொத்த இருப்பின் அடிப்படையில் விவரக்குறிப்புக்குழுவொன்றின் மூலம் 2014க்கான பாடநூல் அச்சுக்கான விவரக் குறிப்புகளைத் தயாரித்தல்.

3. விவரக்குறிப்பு குழுவினால் தயாரிக்கப்பட்ட (திரட்டப்பட்ட) அறிக்கையைக் கல்விவெளியீட்டு ஆணையாளர் மூலம் அனுமதி பெற்று நிதிப்பிரிவிற்குக் கையளித்தல்.

4. ஒவ்வொரு பாடப்பொறுப்பு அதிகாரிகளுக்கும் அச்சகப்பிரதி (Press Copy) மற்றும் மாற்றப்பட்ட பிரதி (Transfer Copy) ஆகியவற்றைவழங்கி அவற்றுள் திருத்தங்களை மேற்கொண்டு உரிய இறுவட்டை தகவல் தொழில்நுட்பப் பிரிவு மூலம் பரிசிலித்தல்.

5. உரிய Tender களைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்களுக்கு அச்சகப்பிரதி (Press Copy) களையும், சரியான இறுவட்டையும் வழங்குதல்.

6. 1,6, 10 தரங்களுக்காக புதிய பாடத்திட்டங்களுக்கிடை எழுதப்படும் நூல்களுக்கப் புதிதாக விவரக்கறிப்பு அமைத்தல்.

7. சரவை பார்த்தல் சந்தர்ப்பம் முதல் தரப் பர்சீலனை இடம்பெறும் வரை நூல்களின் சகல நடவடிக்கைக் கட்டங்களையும் பரிசிலனை செய்தல்.

8. உரிய காலத்துள் அச்சகத்தாரை அறிவுறுத்தி சரியான நூல் தொகையை களஞ்சியசாலைக்குப் பெற்றுக் கொடுத்தல்.

9. பாடநூல்களில் திருத்தங்கள் மேற்கொள்ளும் போதும் நூல்களின் தொகைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளும் போதும் உற்பத்தியாளர்களை அறிவுறுத்தி அவற்றைத் திருத்துதல்.

10 அவசியமேற்படுமிடத்து தேவையான அச்சகங்களைப் பரிசீலித்தலும் அவற்றின் அச்சிடல் தொடர்பான திட்டங்களைப் பெற்று அவற்றைப் பரிசீலனைக்குட்படுத்தி உற்பத்திப் போக்கு தொடர்பான நாளாந்த அறிக்கைகளைத் தயார் செய்தல்.

11. பாடசாலைப் பாடநூல்களின் பௌதிகத் தன்மையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதன் நிமித்தம் உள்வாங்கப்பட்டுள்ள பத்திரிகை (Paper) வெளி அட்டைகளுக்காக நான்கு வர்ண சித்திரங்கள் மற்றும் தேசப்படங்களை வடிவமைத்தல்.வெளி அட்டைகளுக்காக லெமினேட் ஆட்போர்டையும், 220gsm அளவு கடதாசியையும் உள்வாங்குவதன் மூலம் கவர்ச்சிமிக்க நூல் தொகுதியொன்றை மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

12. அனைத்து நூல்களும் விபரக்குறிப்புக்குப் பொருத்தும் விதத்தில் காணப்படுகின்றதா எனப் பரிசீலிப்பதற்காக ஆய்வுகூட அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

13. தேசிய கல்வி நிறுவகத்தடன் தொடர்புக்கொண்டு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடல்.

14. மேலதிக வாசிப்பு நூல்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

15. பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு க.பொ.த (சா/த) க.பொ.த(உ/த) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான வினாவிடை நூல்களை அச்சிடல்.

**முன்னேற்றத்தைக் காட்டும் அட்டவணை**

**2014 ஆம் ஆண்டுக்காகப் பாடசாலைப் பாட நூல் அச்சிடல் - 2013**

| தொடர் இல | அச்சகம் | நூல் வகைகளின் தொகை | பிரதிகளின் தொகை |
|---|---|---|---|
| 01 | அரசாங்க அச்சகம் | 05 | 1030000 |
| 02 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் | 81 | 8546100 |
| 03 | திறந்த கேள்விகள் (Open Tender) | 315 | 27611500 |
| அச்சிடப்பட்ட நூல்களின் மொத்தம் | | 401 | 37187600 |

2014 ஆம் ஆண்டுக்காகப் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி அச்சிடல் - 2013

| தொடர் இல | நூல்களின் வகை | நூல் வகைகளின் தொகை |
|---|---|---|
| 01 | 6 – 11 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் | 39 |
| 02 | 12 – 13 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள | 06 |
| அச்சிடப்பட்ட நூல்களின் மொத்தம் | | 45 |

வினாவிடை நூல்கள் மேலதிக நூல்கள் அச்சிடல் - 2013

| தொடர் இல | நூல்களின் வகை | நூல் வகைகளின் தொகை |
|---|---|---|
| 01 | மேலதிக நூல்கள் | 30 |
| 02 | வினாவிடை நூல்கள் | 17 |
| அச்சிடப்பட்ட நூல்களின் மொத்தம் | | 47 |

## வெளியீட்டுப்பிரிவு (தாபனப்பிரிவு)

**வெளியீட்டுப் பிரிவின் உத்தியோகதத்தர்கள்**

ஆணையாளர் (உற்பத்தி மற்றும் விநியோகம்)

↓

அரச முகாமைத்தவ உதவியாளர் சேவை அதிகாரிகள் (06)

↓

களஞ்சிய சிற்றூழியர் (01)

2013 ஆம் ஆண்டில் விநியோகப்பிரிவின் மூலம் நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகள்

1. பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடுவதற்கான கோரல்களை அச்சகத்தாருக்கு வழங்கல்.

2. ஒப்பந்தங்களை ஒழுங்கமைத்து அச்சகத்தாருடன் உடன்பாட்டுக்கு வருதல்.

3. மேலதிக நூல்களுக்கான ஒப்பந்த மதிப்பீடுகளைப் எடுப்பிப்பது முதல் அச்சிடுதல் வரையிலான அனைத்து நடவடிக்கைகளும்.

4. கேள்வி கோரல்களுக்கு மேலதிகமாக பாடநூல்கருத்துக்கான மதிப்பீடுகளை எடுப்பிப்பது முதல் கோரல்களை ஒப்படைப்பது வரையிலான சகல நடவடிக்கைகளும்.

5. நூல்களுக்கான விலைகளை நிர்ணயம் செய்தல்.

6. அச்சகத்தாருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான வவுச்சர்களை ஒழுங்கமைத்தல்.

# விநியோகப் பிரிவு

அறிமுகம்

அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகளில் தரம் 1 முதல் 11 வரை கல்வி கற்கும் 4 மில்லியனுக்கும் அதிகமான மாணவர் தொகையினருக்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலை வருடம் ஆரம்பிப்பதற்கு முன்பதாகப் பாடநூல்களைப் பெற்றுக்கொடுப்பதே இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகும். இச்செயற்பாட்டின்போது பாடசாலைகள் மற்றும் விநியோக நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற தொகைகளின் அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலைகள் மற்றும் மத்திய நிலையங்களுக்கு அவசியமான பாடநூல்களின் தொகை தீர்மாணிக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டுக்கு அவசியப்படுகின்ற முழுப்பாடநூல்களின் மொத்தத் தொகை தீர்மாணிக்கப்படுவது இத்தொகை அட்டவனை அடிப்படையிலேயே ஆகும்

**விநியோகப் பிரிவின் உத்தியோகத்தர்கள்**

ஆணையாளர் (உற்பத்தி மற்றும் விநியோகம்)

↓

உதவி ஆணையாளர் (01)

↓

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர் (02)

**கடடைகள்**

- ❖ தீவு முழுவதும் காணப்படும் அனைத்து தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், மற்றும் பிரிவெனாக்களுக்கான பாடநூல்களை புதிய பாடசாலை வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் விநியோகித்தல்.

- ❖ நாட்டின் சகல தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் வலயகல்விக் காரியாலயங்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை விநியோகித்தல்.

- ❖ பாடநூல் விநியோக நிலையத்திலிருந்தும், கோட்டக்கல்வி காரியாலயத்திலிருந்தும் பாடநூல்களைப் பெற்றுக்கொள்கின்ற சகல மாகாணப் பாடசாலைகளுக்குமுரிய பாடநூல்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பாடநூல் விநியோக மத்திய நிலையம் மற்றும் கோட்டக் கல்விக் காரியாலயங்களிலுள்ள மத்திய நிலையப் பொறுப்பதிகாரி, உதவி மத்திய நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் தொழிலாளர்களுக்கான கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

- ❖ பாடநூல் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்களைத் தயார் செய்தல்.

- ❖ பாடசாலைப் பாடநூல் தேவைகள் தொடர்பான தகவல்களை ஒன்று திரட்டல் இற்றைப்படுத்தல் சுருக்கத்தை அமைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்திருதல்.

- ❖ மாகாணக் கல்விக் காரியாலயம், வலயக் கல்விக் காரியாலயம், கோட்டக் கல்விக் காரியாலயம், பாடநூல் விநியோக நிலையம் மற்றும் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் தொடர்பு கொண்டு பாடநூல் தேவையை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- ❖ விநியோகம் இடம்பெரும் காலகட்டங்களில் பாடநூல்கள் கிடைக்கப் பெறல், விநியோகித்தல் தொடர்பான நாளாந்த அறிக்கைகளைத் தயார் செய்தல்.

- ❖ திணைக்களத்திற்குச் சொந்தமான பாடநூல் களஞ்சிய சாலைகளில் களஞ்சிய சாலை செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் நூல்களின் பெற்றுக்கொள்ளும் தொகை விநியோகிக்கும் தொகைகள் பற்றிய அறிக்கைகளைப் பிழையின்றி வைத்திருப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- ❖ கடந்த ஆண்டுகளில் அச்சிட்ட பாடநூல்களின் தொகைகள், கோரிய நூல்களின் தொகைகள் பற்றி தகவல்கைக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.

- ❖ கடந்த ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட பாடநூல்களின் தொகைகள் தொடர்பான தகவல்களைக் களஞ்சியப்படத்தி வைத்திருத்தல்.

- ❖ சகல பாடசாலைகளின் அதிபர்களினதும், பாடநூல் பொறுப்பாசிரியர்களினதும் தொலைபேசி இலக்கங்களைத் திரட்டுதலும் இற்றைப்படுத்தலும்.

- ❖ அடுத்த ஆண்டுக்காக அச்சிடப்பட வேண்டிய பாடநூல்களின் அளவைக் கணக்கெடுத்தல்.

**பாடநூல் விநியோகம்**

**கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் நேரடியாகப் பாடநூல் விநியோகம் மேற்கொள்ளப்படும் பாடசாலைகள்.**

- நாட்டினுள்ள தேசிய பாடசாலைகள்
- மாணவர் தொகை 2000 க்குக் கூடிய மாகாணப் பாடசாலைகள்
- கொழும்பு வலயத்திலுள்ள சகல பாடசாலைகளும்
- நுகேகொட கோட்டத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளும்.

**விநியோக நிலையமூடாகப் பாடநூல் விநியோகம் மேற்கொள்ளப்படும் பாடசாலைகள்**

- ஏனைய அரசாங்க பாடசாலைகள்
- அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலை
- பிரிவெனாக்கள்

இதன்படி அரசாங்க பாடசாலைகள் 9732 க்கும் - அரச அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகள் 76 க்கும் பிரிவெனாக்கள் 800 க்குமாக 41 இலட்சம் மாணவர் சமூகத்தினருக்கு 437 வகையான பாடநூல்களின் கீழ் 38 மில்லியன் அளவு.

**பாடநூல் மீள்பாவனைக்கான நடவடிக்கைகள்**

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடநூல்களை வருட இறுதியில் மீள் பாவனையின் பொருட்டு திருப்பி ஒப்படைக்க வேண்டும். (ஆரம்பப் பிரிவுக்கு வழங்கப்படும் பாடநூல்கள் செயல்நூல்கள் க.பொ.த.(சா/த) ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நூல்கள் மீள எடுக்கப்படுவதில்லை) தரம் 6 முதல் 9 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே பாடநூல் மீள்பாவணை தொடர்பான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பாடநூல்களைச் சிறப்பாகவும் பொறுப்புடனும் பயன்படுத்துவதன் பெறுமதி தொடர்பான தெளிவொன்றை பெற்றுக் கொடுப்பதும் மற்றும் அரசினால் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறைப்பதுவுமே இச் செயற்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

**பாடநூல் விநியோக விழா**

2014 ஆம் வருடத்துக்கான பாடநூல் விநியோக உத்தியோக பூர்வ விழா இம்முறை ஹோமாகம – மாகம்மன மகா வித்தியாலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்விழாவானது 2013 டிசம்பர் 6 ஆம் திகதியன்று கௌரவ கல்வி அமைச்சரின் தலைமையில் கௌரவ மேல் மாகாண ஆளுனரின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது. அதன் போது விஷேட உதவி தேவைப்படும். மாணவர்களுக்குப் பாடநூல்கள் வழங்கப்பட்டமை ஒரு விஷேட நிகழ்வாகும். இலங்கை முழுவதும் பாடநூல் விநியோக தினமாக இத்தினம் பிரகனப்படுத்தப்பட்டதுடன் இதனுடன் இனைந்ததாக நாட்டின் சகல பாடசாலைகளிலும் பாடநூல் விநியோக செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றன.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் பாடநூல்களை வழங்கும் விஷேட செயற்திட்டம்**

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களுக்கு மீண்டும் உடனடியாக அவர்களுக்கு அவசியமான பாடநூல்களை வழங்குவதற்கான விஷேட செயற்பாடொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக மேலதிக கோரல்கள் கிடைக்கப்பெற்று ஒரு சில தினங்களுக்குள்ளேயே அவர்களின் தேவையை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

**நூல் விநியோக உபகுழு**

பாடநூல் விநியோகத்தின் போது விஷேடமாகக் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பிரிவுக்காக பல உப குழுக்களை தெரிவு செய்யப்படவேண்டி ஏற்பட்டது.

பாடநூல் விநியோகத்தின் போது விஷேடமாகக் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள் பல உள்ளன.

(அ) அச்சகங்களில் அச்சிடப்பட்டு களஞ்சியசாலைகளுக்கு வரும் பாடநூல்களின் தொகை அவை விநியோகிக்கப்படுவதற்கு முன்னர் அவற்றின் தரம் மரிசிலனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு உரிய பாடநூல் களஞ்சிய சாலைக்கச் சென்று ஒவ்வொரு முறைக்கும் வரும் தொகையையும் பரிசீலனை செய்யும் இச்செயற்பாட்டை முறையாக மேற்கொள்வதன் காரணமாக பாடசாலைச் சிரார்களுக்கு விநியோகிக்கும் பாடநூல்களின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடிந்துள்ளது.

(ஆ) நூல் விநியோக செயற்திட்டதை திட்டமிடுதலும் பாடசாலைகள், விநியோக நிலையங்கள், கோட்டக்கல்வி கல்வி காரியாளயங்கள் போன்றவற்றிட்கான விநியோக கட்டளைகளை ஆக்குவதற்காக (வடிவமைப்பதற்காக) செயற்திட்ட உருவாக்கம் மற்றும் முன்னேற்ற ஒழுங்கமைத்தல் பிரிவொன்று நூல் விநியோகப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. களஞ்சியங்களுக்கு வருகின்ற நூல்களின் வகைகள் அவற்றின் தொகை தொடர்பான உடனடி விபரயங்கள் பெறப்பட்டு விநியோக கட்டளைகளை ஒழுங்கமைப்பதன் காரணமாக ஒரே மாவட்டத்திற்கு நூல்களை வாகனங்களில் எடுத்துச் செல்லும் முறைகளைக் குறைப்பதற்கு இடம் கிடைத்துள்ளது.

(இ) பாடநூல் கோரல் படிவங்கள் 3 வகைகளில் அச்சிடப்பட்டு கோட்டக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அதிபர்ளுக்கும் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. விபரங்களைத் திரட்டும் போதும் பாடநூல்களை விநியோகிக்கும் போதும் ஏற்படும் தவறுகளைக் குறைத்துக் இக்கருமத்தை செயற்திறன் மிக்கதாகவும் பிழையின்றியும் நடைமுறைப்படுத்துவதற்கு இதனால் முடிந்துள்ளது. அடிப்படை பிரிவெனாக்களுக்குரிய பாடநூல்களும் கோட்டக்கல்வி காரியாளயத்தினூடக விநியோகிக்கப்படுவதுடன் அடிப்படை பிரிவெனாக்களின் பிரிவெனாதிபதிகளின் பிரிவெனாக்களுக்கு தேவையான பாடநூல்கள் தொடர்கான புள்ளிவிபரங்களையும் வருடாந்த கோரல் படிவங்களுக்கு உள்வாங்கி அழைப்பதற்கான நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பாடநூல் போக்குவரத்துக்கான கொடுப்பனவு வவுச்சர் ஒழுங்குப்படுத்தல்**

(அ) பாட நூல் விநியோக நிலையத்திலிருந்து பாடசாலை வரை போக்குவரத்துச் செய்வதற்காக அதிபர்களினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை மீள்நிரப்பல் செய்யும் பொருட்டு கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்படும் வவுச்சர்களைப் பரிசீலித்து நிதிப்பிரிவிற்கு அனுப்புதல்.

(ஆ) பாடநூல் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்களை ஒழுங்குப்படுத்தி தேவையான ஏனைய நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்தல்.

## நிதிப்பிரிவு

**நிதிப்பிரிவின் உத்தியோகத்தர்கள்**

பிரதம கணக்காளர், கணக்காளர்

அரச முகாமைத்துவ உதவியாளர்
சேவை உத்தியோகத்தர் (13)

வரவு செலவு உதவியாளர்
அபிவிருத்தி /நிதி உதவியாளர் (03)

அலுவலகக் கரும உதவியாளர் (02)

சமயாசமய ஊழியர்கள் (02)

கடமைகள்

- வருடாந்த செலவு மதிபப்பீடு (உத்தேச செலவு) முற்பணக் கணக்கு எல்லையை நிர்ணயித்தல் மற்றும் உத்தேசச் செலவு மற்றும் எல்லைகள் பிரேரனைக்கு ஏற்ப கருமமாற்றல்
- பாடசாலைப் பாடநூல் அச்சிடல். பாாடநூல் போக்குவரத்து விடயங்களில் உரிய விலை மனு கோரல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திணைகளத்தின் சகல ஊழியர்களுக்குமான வேதன ஒழுங்குப்படுத்தலும் காசோளை விநியோகித்தலும்.
- திணைக்களத்தின் சகல ஊழியர்களுக்கு மேலதிக வேலைக்கான, பிரயாணச்செலவுக்கான, வேறு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கை.
- ஊழியர்களுக்கான மீள் நிரப்பு கடன்கள், துவிச்சக்கரக்கடன், மற்றும் உட்சவ முட்பணம் போன்றவற்றை வழங்கலும் மீள்பெறலும்.
- ஊழியர்களுக்குப் பணம் மூலம் மேற்கொள்ளப்படும் சகல கொடுப்பனவுகளையும் வழங்கல் (சம்பளம் - மீள் நிரப்பு கடன்கள் அன்றி)
- கொடுப்பனவு நடவடிக்கை தொடர்பான சகல புத்தகங்கள், லெஜர்கள், கணக்கு அறிக்கைளைப் பேணி வருதல்
- மாதாந்த கணக்குச் சுருக்கம், வைப்புக் கணக்கு அறிக்கைகள், வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளைத் தயார் செய்தல்.
- வருடாந்த ஒதுக்குக் கணக்குகள் முற்கொடுப்பனவு கணக்குகள் இறுதிக் கணக்கு அறிக்கைகளைத் தயார்செய்தல்.

- திணைக்களத்துக்கு அவசியமான சகல சேவைகளின் நிமிர்த்தமான பில்களைத் (Bill) தெரிவுபடுத்தல்.
- பாடநூல் அச்சுக் கொடுப்பனவு போக்குவரத்துக் கொடுப்பனவுகளை செலுத்ததல்.
- பாடநூல் விநியோகத்துக்கான ஊழியருக்கான கொடுப்பனவு, பாடநூல் போக்கு வரத்துக்கான அதிபர் கொடுப்பனவு, மற்றும் களஞ்சியப் படுத்தல் நிலையப் பொறுப்பு அதிகரிக்கான கொடுப்பனவுகளைக் செலுத்துதல்.
- பாடநூல் விற்பனை மேம்பாட்டு நிலையாட்களின் விற்பனை அறிக்கைகளை கோவைப்படுத்தல்.
- பாடநூலாக்கம், மொழிபெயர்த்தல், பதிப்பித்தல் போன்றவற்றிற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துதல்
- அச்சிடப்படுகின்ற சகல பாடநூல்களுக்கமான விலைகளைத் தீர்மானித்தல்.
- கொள்வனவு அறிவுரைப்பு வழிகாட்டியின் விதந்துரைக்கேற்ப திணைக்களத்தின் கொள்வனவு செய்தல் தொடர்பான விலை கோரல்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இணைப்பாக்கம் கொள்வனவுக் குழுவுக்கு முன்வைத்தல் அதன் தீர்மானத்திற்கிணங்க செயற்படல் மற்றம் கொள்வனவு செய்தல் தொடர்பான கொடுப்பனவுகள்.
- திணைக்களத்துக்குத் தேவையான வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான கொடுப்பனவு.
- சம்பளமுற்பணம் வழங்கலும் முற்பணம் திருப்பி அறவிடுதல் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளும்.
- திணைக்களத்தின் பிரதான களஞ்சியசாலைகளுக்கு புனரமைப்பு மற்றும் முலதனச் செலவுகளின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் பொருட்களுக்களுக்கான கோவைகள், ஆவணங்களை நடைமுறைப்படுத்தல், அவற்றை முறையாக விறியோகித்தல்.
- வருடாந்த தொகை மதிப்பீட்டின் மூலம் பழுதடைந்தவை என உறுதிப்படுத்தப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- திணைக்களத்துக்குரிய சகல வாகனங்கள் தொடர்பாகவும் கோவைகள் ஆவணங்களை நடாத்திச்செல்லல், வாகனங்களைப் பராமரித்தல், புதுப்பித்தல் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- வாகனங்களுக்கு முறைப்படி எரிபொருள் விநியோகித்தலும் ஓட்டம் தொடர்பான அறிக்கை, அட்டவணைகளைப் பரிசீலித்தலும்.
- அரச நிதிச் சுற்றுநிருபத்திற்கேற்ப 'ஸிகாய்' வேலைத்திட்டத்தை உரிய முறைப்படி நடாத்திச்செல்லல்.

கல்வி வெளியீட்டு திணைக்களமானது கல்வி அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வருடாந்தம் 2900 மில்லியன் ரூபாய் அளவு நிதி ஒதுக்கின் கீழ் இயங்கும் ஒரு தனி நிதிப் பிரிவாகும்.

நூல் வெளியீடு தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடல் உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவசியமான அதிகாரபலம். நிதி அதிகாரங்களை வழங்கி நூல் வெளியீட்டை காரியசித்தியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான விதத்தில் கல்வி வெளியீட்டு திணைக்களமானது A தரத்திலான ஒருதிணைக்கள நிலைக்குத் உயரத்ப்பட்டுள்ளது.

இலவச பாடநூல் விநியோகம் எனும் அரசின் செயற்பாட்டை நடைமுறைப் படுத்துவதற்கு மேலதிகமாக, உயர்தர மற்றும் ஏனைய பரீட்சைகளை இலக்காகக் கொண்ட கல்வி வெளியீடுகள் மற்றும் கடந்த வருடங்களின் பரீட்சை வினாப் பத்திரங்கள், மதிப்பீட்டு அறிக்கைகளை வடிவமைத்து அச்சிட்டு சலுகை விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

திணைக்களத்தின் செலவுக்காக வருடாந்த வரவு செலவுத்திட்ட உத்தேச மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படும் ஒதுக்குக்கேற்ப ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்து நிதி வழங்கப்படுகின்றது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கீழ் ஆறு விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் பின்வரும் இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு வளாகம்.
ஓட்கட் மாவத்தை
யாழ்ப்பாணம் - யாழ் மத்திய கல்லூரி
தேசிய கல்வி நிறுவகம் - மகரகமை
ஆசிரியர் பயிற்சி நிலையம் - மீப்பே
கோட்டை புகையிரத நிலையம்

பாடநூல்கள், ஏனைய வாசிப்பு நூல்கள், மொழி பெயர்ப்புப் புத்தகங்கள், கலைச்சொல் அகராதிகள், சொல் அகராதிகள், கல்விப்புல இறுவெட்டுகள், கல்வியியலாளர் குழுவொன்று மூலம் விதந்துறைக்கப்பட்ட எழுத்தாளர்களின் நூல்கள் என்பன இந்நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதுடன், தேசிய பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில மொழி மூலமாகக் கல்வி போதிக்கின்ற தனியார் பாடசாலைகளுக்கான நூல் விற்பனையும் 2008 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு நடமாடும் வாகனம் மூலம் நாடு பூராகவும் நூல் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**2013 ஆம் வருடத்தில் நூல் விற்பனை மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 81,342,102,90 ஆகும்.**

| | |
|---|---|
| இசுருபாய நூல் விற்பனை நிலையம் | ரூ 27,182,691.30 |
| ஓட்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம் | ரூ 44,480,439.50 |
| யாழ்பாண நூல் விற்பனை நிலையம் | ரூ 976,070.03 |
| தே.க.நி. மகரகம நூல் விற்பனை நிலையம் | ரூ 6,132,629.05 |
| ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே நூல் விற்பனை நிலையம் | ரூ 1,553,371.00 |
| கோட்டை புகையிரத நிலைய நூல் விற்பனை நிலையம் | ரூ 1,016,902.00 |
| **மொத்தம்** | **ரூ 81,342,102.90** |

இதற்கு மேலதிகமாக தனியார் நூல் வெளியீட்டாளர்களின் நூல்களையும் விற்பனை செய்யும் செயற்பாடொன்று நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

**2013 ஆம் ஆண்டு தனியார் நூல் விற்பனை மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 796,696,50 ஆகும்.**

| | |
|---|---|
| இசுருபாய நூல் விற்பனை நிலையம் | ரூ 165,870.00 |
| ஓட்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம் | ரூ 310,336.50 |
| தே.க.நி. மகரகம நூல் விற்பனை நிலையம் | ரூ 112,865.00 |
| ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே நூல் விற்பனை நிலையம் | ரூ 193,870.00 |
| கோட்டை புகையிரத நிலைய நூல் விற்பனை நிலையம் | ரூ 11,755.00 |
| **மொத்தம்** | **ரூ 794696.50** |

2013.03.23 ஆம் திகதி முதல் 2013.03.29 ஆம் திகதி வரை நடை பெற்ற **தேசத்திற்கு மகுடம்** தேசிய மாபெரும் கண்காட்சியிலும் 2013.09.14 முதல் 2013.09.22 வரை கொழும்பு பண்டாரநாயக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற **சர்வதேச புத்தகக் கண்காட்சியிலும்** கலந்து கொண்டதன் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சமூகமளித்திருந்த பாடசாலை மாணவர்களுட்பட பெரும் தொகையினருக்கு திணைக்களத்தின் வெளியீடுகளைப் பெற்று கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

# கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நூல் விற்பனை வருமானம் 2013

| மாதம் | ஓல்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம் | இசுருபாய நூ.வி.நி | யாழ்பாண நூ.வி.நி | மீப்பே நூ.வி.நி | கோட்டை நூ.வி.நி | மகரகம நூ.வி.நி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 6,200,294.05 | 2,200,153.00 | 168,799.35 | 153,202.00 | 115,818.00 | 460,196.05 | **9,298,462.45** |
| பெப்ரவரி | 1,784,592.21 | 758,725.00 | 127,855.45 | 112,221.00 | 50,295.50 | 458,319.40 | **3,292,008.56** |
| மார்ச் | 2,011,738.90 | 597,051.90 | 58,552.10 | 126,312.00 | 100,498.00 | 539,353.60 | **3,433,506.50** |
| ஏப்ரல் | 1,315,425.35 | 469,496.50 | 217,512.80 | 106,727.00 | 60,248.00 | 404,011.35 | **2,573,421.00** |
| மே | 1,904,317.93 | 578,788.50 | 194,362.50 | 108,044.00 | 77,557.00 | 557,108.85 | **3,420,178.78** |
| ஜூன் | 2,418,399.15 | 539,995.80 | 186,145.40 | 159,817.00 | 106,791.00 | 594,088.90 | **4,005,237.25** |
| ஜூலை | 2,495,518.35 | 583,207.50 | 116,997.00 | 125,480.00 | 86,724.00 | 557,276.00 | **3,965,202.85** |
| ஆகஸ்ட் | 1,761,073.81 | 689,213.00 | 91,448.90 | 80,218.50 | 58,281.00 | 390,743.90 | **3,070,979.11** |
| செப்டெம்பர் | 1,722,867.50 | 1,094,802.00 | 60,399.55 | 65,166.50 | 35,203.00 | 417,497.45 | **3,395,936.00** |
| ஒக்டோபர் | 4,979,415.76 | 994,115.50 | 79,104.40 | 82,512.00 | 60,757.00 | 381,085.00 | **6,576,989.66** |
| நவம்பர் | 4,890,466.20 | 1,039,682.40 | 56,885.00 | 78,784.00 | 65,376.00 | 327,894.80 | **6,459,088.40** |
| டிசம்பர் | 10,033,551.02 | 2,444,590.00 | 120,516.30 | 118,481.00 | 67,442.00 | 260,776.00 | **13,045,356.32** |
| மொத்தம் | **41,517,660.23** | **11,989,821.10** | **1,478,578.75** | **1,316,965.00** | **884,990.50** | **5,348,351.30** | ***62,536,366.88*** |

# தனியார் நூல் விற்பனை வருமானம்
# 2013

| மாதம் | ஓல்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம் | இசுருபாய நூ.வி.நி | மீப்பே நூ.வி.நி | கோட்டை நூ.வி.நி | மகரகம நூ.வி.நி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 3,435.00 | - | 8,920.00 | 1,935.00 | 18,870.00 | **33,160.00** |
| பெப்ரவரி | 360.00 | - | 1,450.00 | 950.00 | 9,485.00 | **12,245.00** |
| மார்ச் | 415.00 | - | 670.00 | - | 24,840.00 | **25,925.00** |
| ஏப்ரல் | 1,240.00 | - | 850.00 | 1,565.00 | 17,870.00 | **21,525.00** |
| மே | 2,975.00 | - | 400.00 | 1,485.00 | 20,005.00 | **24,865.00** |
| ஜுன் | 3,580.00 | 600.00 | 15,530.00 | 1,820.00 | 30,980.00 | **52,510.00** |
| ஜுலை | 27,500.00 | - | 1,350.00 | 2,990.00 | 27,560.00 | **59,400.00** |
| ஆகஸ்ட் | 3,040.00 | 11,405.00 | 25,525.00 | 3,300.00 | 21,700.00 | **64,970.00** |
| செப்டெம்பர் | 870.00 | 5,745.00 | 11,295.00 | 1,670.00 | 8,830.00 | **28,410.00** |
| ஒக்டோபர் | 29,950.00 | 4,695.00 | 15,050.00 | 1,250.00 | 18,265.00 | **69,210.00** |
| நவம்பர் | 11,887.50 | 8,365.00 | 15,590.00 | 1,810.00 | 14,230.00 | **51,882.50** |
| டிசம்பர் | 1,450.00 | 8,170.00 | 13,555.00 | 630.00 | 11,265.00 | **35,070.00** |
| **மொத்தம்** | **86,702.50** | **38,980.00** | **110,185.00** | **19,405.00** | **223,900.00** | ***479,172.50*** |

**2013 நிதிச் செயற்பாட்டு அறிக்கை**

| வரவு செலவு விபரம் | 2013 வருடாந்த ஒதுக்கு | 2013.12.31 ஆம் திகதியன்று செலவு |
|---|---|---|
| **சம்மதிக்கப்பட்ட செலவுகள்** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 19.900.000.00 | 12.875.785.79 |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 9.544.000.00 | 8.938.722.14 |
| முழு மீண்டுவரும் செலவுகள் | 29.444.000.00 | 21.814.507.93 |
| **மூலதனச் செலவுகள்** | | |
| புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் | 200.000.00 | 182.293.00 |
| **மூலதனச் செலவுகளைக் கையாள்தல்** | | |
| தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 600.000.00 | 596.438.00 |
| பொறித்தொகுதி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 800.000.00 | 780.390.00 |
| கட்டடங்கள் | 43.128.000.00 | 43.128.000.00 |
| திறன் விருத்தி | 600.000.00 | 239.031.00 |
| மொத்தம் | 45.128.000.00 | 44.743.859.00 |
| **ஏனைய மூலதனச் செலவுகள்** | | |
| பாடசாலைப் பாடநூல் தரத்தை மேம்படுத்தல் | 10.000.000.00 | - |
| **அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு** | | |
| மிகக் கூடிய செலவு எல்லை - (பாடநூல் அச்சிடல் விநியோகம்) | 2.900.000.000.00 | 1.449.072.721.12 |
| மிக்க குறைந்த இருப்பு எல்லை - | 2.900.000.000.00 | 1.853.728.062.62 |
| மிகக் கூடிய செலவு எல்லை மீதி - | 4.000.000.000.00 | 620.431.968.69 |
| **அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு** | | |
| மிகக் கூடிய செலவு எல்லை - | 5.280.000.00 | 5.283.792.00 |
| மிக்க குறைந்த இருப்பு எல்லை - | 3.740.000.00 | 6.887.490.00 |
| மிகக் கூடிய செலவு எல்லை மீதி - | 30.416.000.00 | 19.735.449.36 |

**உள்ளகக் கணக்காய்வுக் கிளை**

# அறிமுகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் எதிர்பார்க்கும் இலட்சியங்களை நடைமுறைப்படுத்துவதற்காகச் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மிகத் திட்டமிட்டு உள்ளகக் கருமங்களை வேலை ஒழுங்குடன் கூடிய, முறையான முகாமைத்துவ சூழலொன்றை நடைமுறைப்படுத்திச் செல்லல்.

**கடமைகள்**

1. உள்ளக முகாமை முறையின் செயற்பாடுகளைப் பரீசீலனை செய்தல்
2. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் எதிர்பார்க்கும் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் விளைவுகளையும் காரிய சித்திகளையும் பரிசீலனை செய்தல்
3. செயற்பாட்டு முகாமை, கணக்கியல் குறைபாடுகள், செயற்திறன், சட்டதிட்டங்கள் ஒழுங்குவிதிகளிகளிற்கு மாற்றமான கொடுக்கல் வாங்கல் தொடர்பாகத் தேடியறிந்து கண்டுபிடித்த விடயங்களை செயலாளருக்கு அறிவித்தல்.
4. கணக்காய்வு விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் சீர்படுத்தல் செயற்பாட்டை மேற்கொள்வதும், பின்னூட்டல் மூலம் சிறந்த நிர்வாகமொன்றை ஏற்படுத்தலும்.

பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

↓

உள்ளகக் கணக்காய்வு அதிகாரி

↓

அலுவலக ஊழியர் சேவை

**கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்குரிய கணக்காய்வு விசாரணை, கணக்காய்வு அறிக்கைகளின் குறைகாடுகளைச் சீர்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 2013**

| இல | விபரம் | சீர்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு மேலதிகமாக தொலை பேசிகளைப் பயன்படுத்தல் | விநியோகப் பிரிவில் உள்ள தொலைபேசியை ஒரு பொதுவான தொலைபேசியாகப் பிரகடனப்படுத்துவதும் மேலதிகமாக செலுத்தப்பட்ட பெறுமதிக்காக அரசாங்க நிதிப் பணிப்பாளரின் அனுமதியை பெறுவதற்காக நடவடிக்கை எடுத்தலும். |
| 2 | மேலதிக நூல் அச்சிடல் தூய கணிதம் | அச்சிடல் நடவடிக்கையை முடித்து வைத்தல் |
| 3 | பாடநூல் பதிப்பு தொடர்பாக இந்தியாவில் நடந்த பாட நெறிக்காக மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்ட நிதியைத் திருப்பி அறவிடல் | கல்வி அமைச்சின் வெளிநாட்டுப் பிரிவு மூலம் வடிவமைக்கப்பட்ட எஸ்டிமேட்டிற்கு ஏற்ப செலுத்தப்பட்டுள்ளது. |
| 4 | விநியோக செயற்பாட்டின் நிமிர்த்தம் சமயாசமய ஊழிய ர்களை ஈடுபடுத்தல் | திணைக்களத்தின் வேலைவாய்ப்பு இடங்களை நிரப்பும் படியாக உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 5 | முற்பண 'பீ' கணக்கில் மிகுதி தெளிவுபடுத்தல் | மிகுதி இல்லாமை தெளிவுபடுத்தப்பட்டது |
| 6 | பிட்டிபன களஞ்சிய சாலைத்தொகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் குறைபாடுகள் காணப்படல் | ஒப்பந்தத்திற்கேற்ப தடுத்து வைக்கப்பட்ட 5% ஒதுக்கு, குறைபாடுகளை நிறைவு செய்யும் வரை செலுத்தாமல் இருப்பதற்கு முடிவுசெய்தல் |
| 7 | அனுமதிக்கப்பட்ட முற்பணக்கணக்கில் குறைபாடுகள் காணப்படல் | 2013 ஆம் அண்டுக்கு அனுமதித்த முற்பணக்கணக்கைத் தயார் செய்யும் போது குறைபாடுகளை நீக்கும் வகையில் தயார்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 8 | மேலதிக நூல் அச்சீடு – கணித வாய்பாடு | எஞ்சிய நூல்கள் தொகையில் ஒன்றின் விலையைக் குறைத்து விற்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 9 | மேலதிக நூல் அச்சீடு – உயர்தரப் பொருளியல் | விற்பனை செய்ய வேண்டிய விலையான ரூ.65/- இற்கே விற்பனை செய்வதற்கு சகல தரத்தினரையும் அறிவுறுத்தல் |